මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

(47)

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office } (94)-11-2484500 (94)-11-2484600 (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website } www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No. } CGO/ASM/Policy/Cir/(VOL II)
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2019.12.04

**ஆதன முகமைத்துவ சுற்றுநிருப இல. 04/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்

**அரசாங்கத்தின் நிதியல்லாத ஆதன முகாமைத்துவம் - மோட்டார் வாகனங்களின் பயன்பாடு**

அரச கொள்கைக்கேற்ப அரசாங்க நடவடிக்கைகளை முகாமைசெய்வது குறித்து சனாதிபதியின் செயலாளரினால் வெளியிட்ட 2019 டிசம்பர் 02 ஆந் திகதிய PS/CSA/ Circular/4/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்கத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டு முகாமையினை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

02. மேற்கண்ட சுற்றறிக்கையின்படி, மோட்டார் வாகனங்களை கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கு முன்னர், அத்தகைய மோட்டார் வாகனங்களின் விவரங்களை இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய தகவல்களின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திய பின்னர், அத்தகைய வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகத்தினால் அறிவிக்கப்படும்.

03. மேலும், உங்கள் அமைச்சு மற்றும் உங்கள் நோக்கெல்லையின் கீழ்வரும் நிறுவனங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் பற்றிய தகவல்களை 2019 டிசம்பர் 31 அன்றுவரை இற்றைப்படுத்தி, 2020 ஜனவரி 15 அல்லது அதற்கு முன்னர் கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்:

i. சனாதிபதியின் செயலாளரால் வநியோகிப்பட்ட, 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, புதிய அமைச்சர்கள் மற்றும் அமைச்சரின் அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்கள் - இணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தில்.

ii. 2017 ஜூன் 28 ஆந் திகதிய ஆதன முகமைத்துவ சுற்றுநிருப இல. 01/2017 இன் படி அமைச்சுகள், திணைக்களங்கள், அரச தொழில்முயற்சிகள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் பற்றிய தகவல்கள்.

04. இது தொடர்பாக உங்கள் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

**ஒப்பம்/ எஸ்.ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாயர்**

பிரதிகள்: 1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்

**Annexure - I**

| Name of the Ministry | Motor Vehicle Registration Number | Method of Acquired(Outright/Financial Leasing/Operational Leasing/Other (please specify) | Type of Vehicle (SUV, Car, Double Cab, Van) | Make & Model | Year of Manufacture | Details of Previous Usage of Vehicle | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Ministry | To Whom Assigned | |
| | | | | | | | Name | Position |
| | | | | | | | | |

**Annexure - II**

| Name of the Ministry | Motor Vehicle Registration Number | Method of Acquired(Outright/Financial Leasing/Operational Leasing/Other (please specify) | Type of Vehicle (SUV, Car, Double Cab, Van) | Make & Model | Year of Manufacture | To Whom Assinged | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Name | Position |
| | | | | | | | |